செ.வெ.எண்-40 நாள்-23.08.2021

# பத்திரிக்கைச் செய்தி

விவசாயிகள் வேளாண் விளைபொருள்களை உற்பத்தி செய்பவர்களாக மட்டும் இருந்து விடாமல் தங்கள் விளைபொருளை சந்தைப்படுத்தும் திறனை ஏற்படுத்த ஏதுவாக வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகத்துறையால் இதற்குத் தேவையான கட்டுமான வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. எனினும், விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், வேளாண் சார்ந்த தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் மற்றும் (Start Up) என்று அழைக்கப்படும் வேளாண் துவக்க நிதி நிறுவனங்கள் அவரவருக்குத் தேவையான கட்டுமான வசதிகளை ஏற்படுத்தி கொள்ள ஏதுவாக வேளாண் உட்கட்டமைப்பு நிதி என்ற ஒன்றிய அரசின் திட்டத்தின் கீழ் கடனுதவி வழங்கப்பட்டு, வட்டியில் 3 சதவிகிதம் சலுகையும் வழங்கப்படுகிறது.

உதாரணமாக ஒரு விவசாயி தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கத்தில் இத்திட்டத்தின் கீழ் கடனுதவி பெறுவாராயின் அக்கடனுக்கு விதிக்கப்படும் மொத்த வட்டி விகிதம் 4 சதவிகிதமாகும். இத்திட்டத்தின் கீழ் 3 சதவிகிதம் வட்டியில் விலக்கு அளிக்கப்படுவதால் நிகர வட்டி விகிதம் ஒரு சதவிகிதமாகும். எனவே, விவசாயிகள், உழவர் உற்பத்தியாளர் நிறுவனங்கள், வேளாண் சார்ந்த தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் மற்றும் (Start Up) என்று அழைக்கப்படும் வேளாண் துவக்க நிதி நிறுவனங்கள் இத்திட்டத்தை பயன்படுத்தி பயன் பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இத்திட்டத்தில் பயன்பெற விரும்புவோர் கீழ்காணும் அறுவடைக்குப் பிந்தைய மேலாண்மைத் திட்ட வரையறைக்குள் ஒரு விரிவான திட்ட அறிக்கையினை (DPR) தயாரித்திட வேண்டும். இதற்கான மாதிரி விரிவான திட்ட அறிக்கை agriinfra.dac.gov.in இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

மின்னணு சந்தைப்படுத்தும் தளங்கள் உள்ளிட்ட தொடர் சங்கிலி சேவைகளை வழங்குதல், சேமிப்பு கிடங்குகள், சேமிப்பு குதிர், சிப்பம் கட்டும் அறைகள், மதிப்பீட்டு அலகுகள்,தரம் பிரிக்கும் அலகுகள், குளிர்பதன சங்கிலிகள், தளவாட வசதிகள், முதன்மைப் பதப்படுத்தும் நிலையங்கள், பழுக்க வைக்கும் கூடங்கள், முந்திரி முதன்மைப் பதப்படுத்தும் நிலையம் போன்ற முதன்மை பதப்படுத்துதல் வரையிலான வசதிகளுக்கு கடனுதவி பெறலாம்.

மேலும், இந்த இணையதளத்தில் பயனாளியாகவும் பதிவு செய்து கொண்டு விரிவான திட்ட அறிக்கையினை இணையதளத்தின் மூலமாகவும் பதிவேற்றலாம்.

இத்திட்டத்தில் பதிவு செய்து பயன் பெற விரிவான திட்ட அறிக்கையுடன் விண்ணப்பக் கடிதம் / வங்கியின் கடன் விண்ணப்ப படிவம், விண்ணப்பதாரரின் புகைப்படம் - (Pass port Size), அடையாள ஆதாரம் - (Voter ID card/Pass port/ Aadhar Card/ Driving License), முகவரிக்கான ஆதாரம் (Voter ID card/Pass port/ Aadhar Card/ Driving License/Electricity Bill), விண்ணப்பிப்பது பதிவு செய்யப்பட்ட நிறுவனம் எனில் பதிவு செய்ததற்கான ஆதாரம், கடந்த மூன்று வருடங்களுக்கான வருமான வரி கணக்கை தாக்கல் செய்த விவரம், வரவு-செலவு திட்ட அறிக்கை, நில உரிமைக்கான ஆவணங்கள்,கடந்த ஒரு வருடத்திற்கான வங்கிக் கணக்கு பரிவர்த்தனை நகல், திட்ட கட்டுமானத்திற்கான தளவமைப்பு, மதிப்பீடு மற்றும் அரசின் ஒப்புதல் ஆகிய ஆவணங்களை சமர்ப்பிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**